செ.வெ.எண்:35 நாள்: 13.10.2021

**பத்திரிக்கைச் செய்தி.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் அருங்காட்சியகம்துறை சார்பில், தேசிய புகை உயிரிப் படிவ குறித்து நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களையும், நினைவு பரிசுகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.10.2021) வழங்கினார்.

அருங்காட்சியகங்கள் துறை, புதை உயிரிப் படிவ அருங்காட்சியகம், வாரணவாசி அரியலூர். தேசிய புதை உயிரிப் படிவ தினத்தினை முன்னிட்டு அரியலூர் புதை உயிரி படிவ அருங்காட்சியகத்தின் சார்பாக இன்று 13.10.2021 வாரணவாசி அரசு உயர் நிலைப் பள்ளியில் அரியலூர் மாவட்ட புதை உயிரிப் படிவங்களின் முக்கியத்துவத்தினை பள்ளி மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாக **“அரியலூர் மாவட்ட புதைப் படிவங்கள்”** என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சென்னையினை சேர்ந்த இளம் தொல் உயிரி ஆராய்ச்சியாளர் செல்வி **அஸ்வதா பிஜீ** அவர்கள் மாணவர்களுக்கிடையே அரியலூர் தொல் உயிர் படிவங்கள் தொடர்பாக உரையாற்றினார். பின் நிகழ்ச்சியின் முடிவில் பள்ளி மாணவர்களுக்கு வினாடி வினா நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

புதை உயிரிப் படிவ தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் பங்கேற்று வெற்றிப் பெற்ற மாணவர்கள் மற்றும் இந்த நிகழ்வில் பங்கேற்ற சிறப்பு அழைப்பாளர் இளம் தொல் உயிர் ஆராய்ச்சியாளர் செல்வி.அஸ்வதா பிஜீ அவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் நினைவு பரிசுகளை அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.அ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் அரியலூர் புதை உயிரிப் படிவ அருங்காட்சியக காப்பாட்சியர் (மு.கூ.பொ) சி.சிவகுமார், வாரணவாசி அரசு உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (மு.கூ.பொ) அ.சரவண ராஜா மற்றும் அறிவியல் ஆசிரியர் ம.உமா மகேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**